# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.226/2025 | Date | : 02-03-2026 |
| Deposition of Witness for | : **அ.சா.5** | Taluk | : |
| Name | : **திரு.செல்வகுமார்** | Calling | : |
| Father/Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.03.2026.

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான SI திரு.அருண்குமார், அவர்களின் கையொப்பம் எனக்கு அவருடன் பணிபுரிந்த வகையில் பரிட்சையம் என்பதால் நான் அவருக்கு பதிலாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 07-03-2025 ம் தேதி, மதியம் சுமார் 12.30 மணிக்கு தேவூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக திரு.அருண்குமார், அவர்கள் பணிபுரிந்தபோது, முன்னதாக எடப்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற, பெரியசாமி, என்பவரின் RTA தகவலின்பேரில், மேற்படி மருத்துவமனைக்கு SSI திரு.சந்திரன், என்பவர் சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பெரியசாமி, என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து ஒப்படைத்த புகார் வாக்குமூலத்தின் பேரில் தேவூர் காவல் நிலைய குற்ற எண்.68/2025, சட்டப்பிரிவுகள் 281,

125(a) of BNS- ஆகிய பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையை, வாதியின் புகார் வாக்குமூலத்துடன் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

2) பின்னர், அன்றைய தினமே, பிற்பகல் சுமார் 01.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பாலாஜி மற்றும் முனிராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகள் கையொப்பம் பெற்றுள்ளார் (**பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3) பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் எதிரி நித்தியராஜ், த/பெ.சுந்தரராஜன், என்பவர் TN 30 U 5653 என்ற பதிவு எண் கொண்ட Splendor Plus இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து மோதி விபத்தை ஏற்படுத்தியது உண்மையென தெரிந்து எதிரி நித்தியராஜ், த/பெ.சுந்தரராஜன், என்பவரை தேடிவந்த நிலையில் கடந்த 19.05.2025 ஆம் தேதி, பிற்பகல் சுமார் 12.00 மணிக்கு தேவூர் காவல் நிலையம் முன்பு வைத்து எதிரியை கைது செய்து தக்க இருநபர் நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

4) பின்னர், கடந்த 07-04-2025 ம் தேதி, இவ்வழக்கில் விபத்திற்குள்ளான TN 34 MB 0328 என்ற பதிவு எண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனம் மற்றும் கடந்த 19-05-2025 ம் தேதி, விபத்தை ஏற்படுத்திய TN 30 U 5653 என்ற பதிவு எண் கொண்ட Splendor Plus இருசக்கர வாகனம் ஆகியவற்றை வேண்டுகோள்

கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்து, பின்னர், வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவரை கடந்த 20-05-2025ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கைகளைப் பெற்றுள்ளார் ( **TN 34 MB 0328 என்ற பதிவு எண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனம் மற்றும்** TN 30 U 5653 **என்ற பதிவு எண் கொண்ட Splendor Plus இருசக்கர வாகனம் ஆகியவற்றின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5) பின்னர், அன்றைய தினமே, விபத்தில் காயமடைந்த பெரியசாமி, என்பவருக்கு சிகிச்சை அளித்த எடப்பாடி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.செந்தில் இருசப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பெரியசாமி, என்பவரின் விபத்து பதிவேட்டு அறிக்கையுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றுள்ளேன். (**விபத்து பதிவேட்டு அறிக்கையுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

6) பின்னர், பெரியசாமி, என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என மருத்துவர் காயச்சான்று வழங்கியதால் அன்றைய தினமே, இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் 281, 125(a) of BNS-பிரிவிலிருந்து சட்டப்பிரிவுகள் 281, 125(b) of BNS- பிரிவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்-1, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளேன். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

7) அத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 281, 125(b) of BNS- ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை** :

நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றும், சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Selvakumar